# அன்பு உதய மலர்

ஓம்

சிவ செல்வரஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
கன்னியாகுமரி

# காணிக்கை

## திரு அருட்பா தந்த

திருவருட் பிரகாச வள்ளலார்

இராமலிங்க சுவாமிகள்

பொற்பாதங்களில்

பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்




| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 05-10-1823 |
| சன்மார்க்க சங்கம் | : | 1865 |
| சத்திய தருமச்சாலை | : | 1867 |
| சித்தி வளாகம் | : | 1870 |
| சத்திய ஞான சபை | : | 1872 |
| ஒளியாகி எங்கும் நிறைந்தது | : | 30-01-1874 |

# அன்பு உதய மலர்




## சிவ செல்வராஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

வசந்தம் இல்லம் - வடக்கு குண்டல்,

கன்னியாகுமரி - 629 702.

Cell : 92451 53454

## பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | அன்பு உதய மலர் |
| ஆசிரியர் | : | சிவ செல்வராஜ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| உரிமை | : | S.S. சுயம்ஜோதி |
| வெளியிடுவோர் | : | சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>வசந்தம் இல்லம் - வடக்கு குண்டல்<br>கன்னியாகுமரி - 629 702 |
| முதல் பதிப்பு | : | 14-04-2006 - தமிழ் புத்தாண்டு<br>ஸ்ரீவிய வருஷம்<br>1000 பிரதிகள் |
| காணிக்கை | : | ரூ. 10 |
| கிடைக்குமிடம் | : | ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில் - 629 001<br>Ph : 04652 - 221307<br><br>R. சிவலிங்கம்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>பிளாக் எண் 14, K.M.A. கார்டன், சின்னாண்டிமடம்,<br>கொடுங்கையூர், சென்னை - 600 118<br>Cell - 94443 62227<br><br>N. கோபால் சாமிராவ்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>C-3, பஞ்சாப்ரோடு, பிளாக் - 4,<br>நெய்வேலி - 607 801. Cell : 94438 76394 |
| அச்சிட்டோர் | : | நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில். Ph : 233853 |


### ஆசிரியரின் பிற ஞான நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| கண்மணி மாலை | ரூ. 50 | அஷ்டமணி மாலை | ரூ. 50 |
| அருள்மணி மாலை | ரூ. 50 | செல்வமே சீர் தாருமே | ரூ. 10 |
| ஸ்ரீபகவதி அந்தாதி | ரூ. 10 | செந்திலாண்டவன் பாமாலை | ரூ. 10 |
| அருட்பெருஞ்ஜோதி அந்தாதி | ரூ. 10 | வள்ளலார் விழியே | ரூ. 20 |
| சன்மார்க்க தெய்வம் | ரூ. 10 | ஜோதிமணி மாலை | ரூ. 20 |
| சற்குரு கோவிந்த சுவாமிகள் | ரூ. 10 | ஜோதி ஐக்கூ அந்தாதி | ரூ. 50 |

**வாங்கி! படித்து! உணர்ந்து? வாழ்வாங்கு வாழ்க!**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

வசந்தம் இல்லம், வடக்கு குண்டல்,
கன்னியாகுமரி - 629 702

## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நன்றி. நலமே நிலவுக. எல்லாம் வல்லவரான, எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால், சற்குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஆசியால், அடியேனை ஆன்மீக பாதையில் நடைபயில வைத்த கருணையின் திருஉருவம் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் தூண்டுதலால், அடியேன் 21-03-1992 இல் முதன்முதலாக கண்மணி மாலை என்னும் ஞானவிளக்கம் கூறும் நூலை ஞானிகள் ஆசியுடன் வெளியிட்டேன்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உள்ளிருந்து தூண்ட பற்பல கவிநூற்கள் ஆக்கினேன். இறைவனை சுட்டும் இனியபாக்களே என் கை எழுதியது! ஆன்மீக வழி காட்டும் அறிவுப் பாடல்களே! எனது பிரார்த்தனையும் கூடவே இணைந்தது.

இரண்டாவதாக 21-12-1995 அனுமன் ஜெயந்தியன்று தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்ஸர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய விநாயகர் அனுமன் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக மதுரை அன்பர் திரு. A. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக 23-01-1996 தோட்டியோடு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் குருபூஜையன்று, குருவருளால் அடியேன் எழுதிய ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக இரணியல் அன்பர் திரு. K. திருநீலகண்டன் அவர்கள் வெளியிட்டார்கள்.

நான்காவதாக 28-07-1996 பிரதோஷத்தன்று மருந்துவாழ்மலை ஓம் உன் திருவருளடி ஆனந்த காளிதாசன் சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ சுந்தரேஸ்வரர் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக ஆரல்வாய்மொழி ஜோதி குரு ஞானசபை அன்பர் சிவத்திரு இராமசாமி நாடார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஐந்தாவதாக 16-09-1996 விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ அறுகம்புல் சித்தர் நடராஜ சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ

அறுகம்புல் சித்தி பாலவிநாயகர் துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக கோணம் ஸ்ரீ அறுகம்புல் சித்தர்தபோவன டிரஸ்ட்டார் வெளியிட்டார்கள்.

ஆறாவதாக 13-10-1996 நவராத்திரி முதல் நாளில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 174-ஆவது திருஅவதார தின நன்னாளில் என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ ஆயுர் தேவி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக வேம்பனூர் அன்பர் திரு. P.K. மாதவன் நாயர் அவர்கள் நினைவாக அவர்தம் மனைவி திருமதி. M. ஹைமாவதி தங்கச்சி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏழாவதாக, 14-01-1997 பொங்கல் நாளில் அடியேன் எழுதிய தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்சர் போற்றி பாடல்கள், ஸ்ரீ அழகிய மணவாள விநாயகர் துதிகள் ஆக 108-ஐ இலவசப் புத்தகமாக பள்ளத்தூர் வாழும் உத்தம தம்பதிகள் திரு. S. தங்கமணி நாடார் திருமதி. S. தங்கப்பழம் நாடாச்சி ஆகியோர் வெளியிட்டார்கள்.

எட்டாவதாக 07-03-1997 மகா சிவராத்திரி திருநாளில் அடியேன் எழுதிய திருப்பன்னிபாகம் அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக, எனது தந்தை ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. K. சிவசுப்பிரணியபிள்ளை அவர்களின் 80 வயது நிறைவைக் கொண்டாடும் விதமாக எனது மகன் S.S. சுயம்ஜோதி Pre. K.G. அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒன்பதாவதாக பேயோடு, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக திருநாளில் 15-06-1997-ல் பேரருள் புரியும் பேயோடு ஸ்ரீ குருதவசி ஐயா பாமாலை 108-ஐ இலவச புத்தகமாக ஸ்ரீ குருதவசி ஐயா குடும்பத்தாராகிய பேயோடு ஊர் பொதுமக்கள் வெளியிட்டார்கள்.

பத்தாவது நூலாக, அடியேன் முதலில் வெளியிட்ட கண்மணிமாலை பல புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு 10-09-2002 விநாயகர் சதுர்த்தியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதினொன்றாவது நூலாக, சற்குரு வள்ளலார் தூண்டுதலால் அடியேன் அருள்மணி மாலை என்னும் ஞானவிளக்க நூலை எழுதி 18-02-2004 மஹா சிவராத்திரியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பன்னிரண்டாவது நூலாக அடியேனை காத்து இரட்சிக்கும் அகில உலக அன்னை, ஆதி சக்தி, கன்னிகா பரமேஸ்வரி, பாலா, வாலை, தாய், கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மனை வேண்டி பிரார்த்தித்து

ஸ்ரீ பகவதி அந்தாதியை இயற்றி நாகர்கோவில் கெங்கா ஜூவெல்லர்ஸ் பேருதவியால் 23-06-2004 ஆனி-மகம் மாணிக்கவாசகர் குருபூஜையன்று அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி, மகாமாயை கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதின்மூன்றாவது நூலாக, எல்லாம் வல்ல இறைவன் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் திறத்தைக்கூறி, அருள்புரியும் விதத்தை வெளிப்படுத்தி, அடியேன் உள்ளிருந்து சற்குரு வெளிப்படுத்தி அருளிய, ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி அந்தாதி என்னும் நூலை 25-01-2005 தைப்பூசத்தன்று திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ் உயர்திரு. S.R. முத்து கிருஷ்ணன் பேருதவியால் வடலூரில் தர்ம சாலையில் வெளியிடப்பட்டது.

பதினான்காவதாக சன்மார்க்க தெய்வம் எனும் நூலை நாகர்கோவில் ஜெயகுமாரி புத்தக நிலைய உரிமையாளர் S. அசோக்குமார், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 80-வது பிறந்த நாளான 23-11-2005-ல் வெளியிடுகிற புண்ணியம் பெற்றார்.

பதினைந்தாவது நூலாக "சற்குரு கோவிந்த சுவாமிகள்" 30-12-2005 ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி திருநாளில் ஆரல்வாய்மொழி இராமலிங்க சுவாமி நிலைய அன்பர் ஜோதி ஸ்ரீ N. கனக சபாபதி அவர்களால் வெளியிடப்பட்டது.

பதினாறாவது நூலாக அடியேன் ஏற்கனவே இலவசமாக வெளியிட்ட எட்டு நூற்களைத் தொகுத்து "அஷ்டமணி மாலை" என்று 06-04-2006-ல் அடியேனின் 50-வது பிறந்தநாளில் நட்சத்திரத்தில், 1992-ம் வருட முதலே எம்மை ஆதரித்துக் காத்தருளும் என் உயிர் சென்னை அன்பர்கள் ஜோதி ஸ்ரீ த. முருகேசன், ஜோதி ஸ்ரீ G. நாராயணா ஜோதி ஸ்ரீ G. கோபாலகிருஷ்ணன் ஆகிய மும்மூர்த்திகளும் வெளியிட்டார்கள்.

பதினேழாவது நூலாகவும், அடியேனின் பொன்விழா ஆண்டு வெளியீடாகவும், ஆன்மீக வெள்ளிவிழா ஆண்டுவிழா வெளியீடாகவும் "செல்வமே சீர் தாருமே" நூல் அடியேனின் 14 வருட திருமண நிறைவு நாளில் 08-04-2006-ல் எம் உயிரோடு கலந்துவிட்ட ஜோதி ஸ்ரீ R. சிவலிங்கம் சென்னை அவர்கள் வெளியிட்டார்.

பதினெட்டாவது நூலாக இந்த "செந்திலாண்டவன் பாமாலை" 11-4-2006 பங்குனி உத்திர நாளில் என் வணக்கத்திற்குரிய பெரியவர் R. துரைசாமி அவர்களும் அன்பின் இனிய நண்பர் S.B. சுப்பையா அவர்களும் வெளியிடுகிறார்கள். நன்றி நன்றி.

பத்தொன்பதாவது நூலாக இந்த "அன்பு உதய மலர்" 14-4-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக ஆசிரியரின் 50 வருட பொன்விழா வெளியீடாக வெளிவருகிறது.

எமது அன்பர் சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ இராஜப்பா அவர்கள் இதனை வெளியிட்டு புண்ணியத்தை தேடிக் கொண்டார்கள். மிக்க நன்றி. நன்றி. அவருக்கு இறைவன் சகல நலன்களும் அருள பிரார்த்திக்கின்றேன்.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் சென்னை அணுக்கத் தொண்டர் R. சிவலிங்கம், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நெய்வேலி அணுக்கத் தொண்டர்கள் N. கோபால்சாமி ராவ், நிர்மலா தேவி ஆகியோருக்கும் அடியேன் என்றும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். நன்றி.

அடியேனை காத்து அருளும் நண்பர்கள் T. முருகேசன், G. நாராயணா, G. கோபாலகிருஷ்ணன், ஆரல்வாய்மொழி N. கனக சபாபதி, நாகர்கோவில் S. கிருஷ்ணபிள்ளை, சி. சுப்பிரமணியம், எட்வர்ட், M. கோபால ஆசான் மகன் ராஜா, ஆசான் சேகர் ஆகிய அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றி. நன்றி.

எல்லோரும் எல்லா நலனும் பெற்று நலமுடன், சிறப்புடன், வளமுடன் வாழ்வாங்கு வாழ வேண்டி இறைவனை வணங்குகின்றேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

என்றும் உண்மையுள்ள,
**சிவ. செல்வராஜ்,**
கன்னியாகுமரி.



# அன்பு உதய மலர்

அடியேன் இதுவரை எழுதிய நூற்கள் அனைத்தும் அன்பு உதயமாகின்ற மலரைப் பற்றியதே!

காலங்காலமாக நம்நாட்டில் வழங்கிவந்த சனாதன தர்மம் போதித்து வந்தது அன்பைப் பற்றியதே.

பிரணவத்தின் - ஓங்காரத்தின் - பகுப்பே அ - உ - ம். அது உதயமாவது நமது தலையில் இறைவன் கருணையால் வழங்கப்பட்ட திருவடியாகிய கண்மலர்களே! அங்குதான் அன்பு - கருணை வெளிப்படுகிறது.

அடியேன் குரு மூலமாக அறிந்து உணர்ந்து கொண்டதை நீங்களும் அறிய வேண்டியே இந்நூல். அடியேன் உள்ளத்தில் உதித்தவை பாமாலைகளாக வெளிவந்துள்ளது.

முதல் **51** பாடல்கள் அந்தாதியாக வெளிப்பட்டுள்ளது. பின்னர் வேண்டுதல் - எண்ணம் - பிரார்த்தனை எல்லாமாக வந்துள்ளது. பார்த்துப் படித்து பயன்பெறுக. நாடி வந்தால் நலம் பெறலாம்.



# அன்பு உதய மலர்

## காப்பு

தேவாதி தேவனே தேறுதல் தருவோனே
மூவாத நிலையை மூலப்பரம் பொருளே
சாவாத தன்மையை சகலரும் அறியவே
பாதாதி கேசம் பரவியவனே காப்பு

## நூல்

செந்தூர் அமர்ந்த செந்தில் முருகா
வந்தார் வாழ்ந்திட வரம்பல தருவானே
பந்தமார் உனையன்றி பரிதவிக்க விடாதே
தந்தோமோர் சிவமே தலைவா சரணமே

சரணமே எனயான் சந்நிதி வந்தபின்
மரணமே வராது மகிழ்ந்திட செய்தாயே
வரணுமே என்னுடனே வல்லபம் தருகவே
அறணுமே துன்பம் அறிவும் துலங்கவே

துலங்கவே உலகில் துவாதசாந்த நிலையே
மலங்கவே விழிக்கும் மக்களை மாற்றி
கலங்கவே செய்யாது கண்மலர் சூட்டி
அலங்கல் அணிந்தேன் அடியேன் உனக்கே

உனக்கே அடிமை உறுதியுடன் நிற்கவே
மனக்க வலையை மாற்றிடும் வேலவா
கனக்கா துகாஇவ்வடி கடுந்துயர் மாற்றுமே
சினக்கா மலேயிரு சிவமகன் உள்ளானே

உள்ளானே எங்கும் உன்னுளும் நிறைந்தே
துள்ளாதே மாயை துன்பமே மிஞ்சுமே
அள்ளாதே கொடு அறும் வினையே
எள்ளாதே பிச்சு என்றே பாரே

பாரே உன்னையே பாவம் கண்ணிலே
நீரே அருவியாய் நீண்டிட இருமே
சாரே உணர்விலே சாயுச்சியம் நிச்சயமே
வேறே எண்ணாதே வேதனை மாறுமே

மாறுமே உடலும் மங்கலம் கூடுமே
ஏறுமே உஷ்ணம் ஏக்கம் போகுமே
கூறுமே உலகுக்கு கூக்குரல் இட்டே
நாறுமோ இவ்வுடல் நாதன் நிலைத்தாலே

நிலைத்தாலே சிரஞ்சீவி நிர்விகல்பம் கூடுமே
அலையும் மனதை அவனடி சேர்த்திடு
சிலைபோல இருந்து சின்மயம் லயித்திடு
உலைபோல் உள்ளதை ஊன்றி வையே

வையே மனத்தை வையகம் போன்றதிலே
மெய்யே சத்தியமே மெய்ப்பொருள் அதுவே
குய்யோ முறையோஎன கூக்குரல் ஆகாதே
பொய்யே யல்லயுடல் பொன்னுடல் பெறலாமே

பெறலாமே முருகனை பெருங் கருணையாலே
அறலாமே வினை அப்பன் சிவனாலே
உரலாமே உன்மணி உணர்வாம் உலக்கையாலே
தரலாமே வாழலாமே தன்னை உணரலாமே

உணரலாமே அறியலாமே உலகை உள்ளதை
உணவாக காய்கனி உடலை சீராக்குமே
மணமாகி பண்புடன் மக்களுடன் வாழலாமே
பிணமாக போகாதே பேர்பெற வாழ்வாயே

வாழ்வாயே பக்தியுடன் வாழுநெறி அறிந்தே
மீள்வாயே வினைவழி மீண்டும் பிறவாமலே
ஆள்வாயே உலகை அன்பால் அறத்தால்
ஊள்வாயை அடைக்க ஊற்றென ஜோதியாலே

ஜோதியாலே வாழலாம் ஜோதியே சிவம்
ஜோதியாலே வெல்லலாம் ஜோதியே நீயே
ஜோதியே முருகன் ஜோதியே பரப்பிரம்மம்
ஜோதியே ஆதியந்தம் ஜோதியே எல்லாமே

எல்லாமே அறியலாம் எட்டிரண்டு அறிந்தாலே
நில்லாமே ஓடிடும் நின்பாதம் அழகே
கல்லாமலே கற்கலாம் கடஉள்ளே கடினமல்ல
கல்லைபோல இருந்தாலே கண்முன்னே கடவுளே

கடவுளே கண்மணி கருதிப் பாரே
உடலுளே அகார உகாரமாய் ஒளியாய்
கடந்துளே உணர்ந்தால் கடவுள் நீதானே
திடமுள்ளே கொண்டால் திகட்டாத இன்பமே

இன்பமே உணர்வது இனிதுரைக்க முடியுமோ
துன்பமே இல்லாத தூயநெறி சன்மார்க்கமே
அன்பால் எவ்வுயிரும் அரவணைத்து வாழ்வே
பண்புரை ஞானியர் பகன்றார் உலகுக்கே

உலகுக்கே ஒளிதான் உயிராவதும் அதுவே
சிலருக்கே தெரிகிறது சிகாரம் அறிந்தாலே
பலருக்கும் உரைக்கவே பணித்தான் அடியேனை
மலருக்கு கரும்பூக்கு மணியாய் ஒளியானை

ஒளியானை மறைந்து ஒளிர்பவன் இரவிமதியே
விழியானை மலர்த்தி விளங்குபவன் கருநெல்லியே
மொழியால் சிந்திக்க மொழிந்தான் சித்தரே
அழியாது வளர்க்க அறிவுறுத்தினான் வள்ளலே

வள்ளலே என்னுளே விளங்கு அருட்பிரகாசரே
விள்ளல் சிறக்கவே வியனுலகு களிக்கவே
புள்ளியிலே விளங்கும் புதுமை பாரறியவே
அள்ளித்தா அருளை அகரத்தில் நின்றவனே

நின்றவனே எந்நாளும் நிலைக்க வழிகாட்டி
அன்றவனே உணர்த்திய அத்வைத விழிகாட்டி
இன்றவனே நமக்கு இருந்து ஒளியூட்டி
மன்றவனே பார்த்து மலரடி சேர்ப்பானே

சேர்ப்பானே முத்தீயை சேர்வான் பரமனடி
பார்ப்பானே அடைவான் பார்த்தசாரதி திருவடி
ஓர்ப்பானே உணர்வான் ஒளியிருந்த வீட்டை
ஈர்ப்பானே நல்லோரை ஈரநெஞ்சம் உள்ளவரை

உள்ளவரை அன்பு உதய மலரை
அள்ளிபருக வாரும் அகத்தீ பெருக்கவே
துள்ளியோடு மனதை தவத்தில் இருத்திட
பள்ளியறை எழுப்பிட பசித்திரு தனித்திரு

தனித்திரு விழித்திரு தன்னையே காணலாம்
இனித்திரு விழாதான் இன்பமே எந்நாளும்
களித்திரு உணர்ந்திரு கண்மணியில் ஒளியில்
அளித்திரு உலகுக்கு ஆத்ம ஞானத்தை

ஞானத்தை பெற நன்னெறி கடைப்பிடி
தானத்தை செய்து தவமும் செய்வாயே
ஞானதானம் செய்வதே நாநிலத்தில் பெரிதே
மானத்தை மறந்து தானாகி நில்லுமே

நில்லுமே கண்மணியில் நிலைத்தால் ஒளிருமே
அல்லும் பகலுமே அகரஉகர உணர்விலே
செல்லும் வெண்சாரை சிகரம் மயிர்பாலவழி
கல்லும் கனிந்துருகி காட்சி கிட்டுமே

கிட்டுமே பேரானந்தம் கண்டால் தன்னையே
தட்டுமே மணிகதவை தகதகக்கும் ஜோதியே
எட்டுமே அறிவுக்கு எட்டிரண்டும் கரும்பூ
ஒட்டுமே மனதை ஒளியில் உணர்வில்

உணர்வில் தான்எல்லா உலக அனுபவமும்
உணர்ந்து அறிவதே உண்மை அறிவு
உணர்ந்து நெகிழ்ந்து உன்னை உணரலாம்
உணர்வாய் ஒளிர்பவனே உள்ளுறை ஈசன்

ஈசன் நம்முள்ளும் வாசம் செய்பவன்
ஈசன் எவ்வுயிர்க்கும் நேசன் உயிரானவன்
ஈசனை காணஉணர யோசனை ஆகாது
ஈசனை சும்மா இருந்து ஈசனாகி வாழலாம்

வாழலாம் உலகில் வாழவும் வைக்கலாம்
ஆளலாம் நம்மை ஆண்டவனாகி இருக்கலாம்
மீளலாம் இறக்காமல் முயன்றால் வினைதீரும்
நாளெலாம் திருநாளே நான்மறை உரைப்பதே

உரைப்பதே எம்பணி உலகம் உய்யவே
கரைப்பதே வினையை கடுகளவு ஒளியில்
குறைவதே இல்லை கூடுமே சக்தி
மறைப்பதே கிடையாது மன்னவன் மகிமை

மகிமை பெறுவாய் மலரடி சேர்ந்தால்
இருமை க்குமவனே இணையடி துணையே
எருமை வாகனன் எந்நாளும் வாரான்
இனிமை வாழ்வே இருக்கலாம் சாகாமலே

சாகாமலே என்றும் சிரஞ்சீவியாய் வாழலாம்
சாகாத்தலை உடம்பார் செத்தாலும் இருப்பதே
வேகாக்கால் திருவடி வேகுமா நெருப்பில்
போகாப்புனல் வற்றிப் போகாத கங்கை

கங்கை புருவமையம் கண்மணியே ஒளியே
மங்கை நாம்சேர மணாளன் வரணுமே
சங்கை யறவேநின்று சரணம் என்றால்
கங்கை சூடியவன் கண்முன் தோற்றமே

தோற்றமே இறைவனின் தோல்வியே இல்லையே
ஏற்றமே வாழ்வில் எந்நாளும் இன்பமே
மாற்றமே நம்மில் மனமும் உடலுமே
சீற்றமே கூடாது சிவம்தான் எவ்வுயிரும்

எவ்வுயிரும் நலம்பெற எண்ணுவதே மேன்மை
பல்லுயிராய் நின்றாலும் பரமனின் பிள்ளைதானே
இவ்வுயிர் துலங்குதே இருகண்மணி ஒளியாகவே
நம்முயிர் ஏதென நாமறிவதே சிறப்பு

சிறப்பு மண்ணில் சீரோடு வாழ்வதே
இறப்பு இல்லை இறைவனடி நின்றாலே
பிறப்பு மீண்டும் பிறப்பது தீட்சையே
மறப்பு தந்த மகேசனை துதியே

துதியே குருவை துக்கம் போகுமே
கதியே எனஇரு கருணை புரிவான்
மதியே பெருக மலரடி சேர்வாயே
விதியே என்பது வீணர்கள் சொல்லே

சொல்லே சத்தியம் சத்சங்கம் செல்லே
நில்லே உணர்வில் நிமலனருள் கூடுமே
கல்லே சாகாகல்வி கல்லாய் இருமே
கொல்லே ஆணவத்தை கல்லும் பேசுமே

பேசுமே உன்னுள்ளே பேரின்பம் அதுவே
பேசுமே இறைவன் பேசாது விளங்குவதை
பேசுமே உலகம் பெரியவன் நீயென்றே
பேசுமே மௌனமாகி பிரபஞ்ச வெளியிலே

வெளியிலே உள்ளதே விளங்கும் எல்லாமே
ஒளியிலே உள்ளதே ஒவ்வொரு அணுவும்
வழியிலே குருவால் வரம்பல பெறலாமே
விழியிலே உணர்ந்தால் வினையறும் வருகவே

வருகவே சன்மார்க்கம் வாழும் உலகமே
தருகவே மனதை திருவடியில் நிலைக்கவே
பருகவே அமுதம் பாலா தருவாளே
உருகவே செய்தால் உயரலாம் நாமே

நாமே விதைத்தது நாமே அறுக்கணும்
தேமே என்றிருந்தால் தீர்ந்திடுமோ வினை
பூமே லிருக்கும் புண்ணியனை பற்றுக
வாமே லிருந்துபார் வையகம் துரும்பே

துரும்பே அருளால் துவம்சம் செய்திடும்
கரும்பூ அமர்ந்த கணவன் பாதம்பீடி
இரும்பு போன்ற இதயம் தருவானே
விரும்பு உயிர்வாழ விடுதலை பெறவே

பெறவே மரணமிலா பெருவாழ்வு சரணாகு
மறவே னுனைகதி மற்றுவேறில்லை என்றே
அறவே மும்மலம் அரனடி துணையே
துறவே கொள்க தூயவனாய் மாறுக

மாறுக தீநெறிவிட்டு மாற்றும் தீதானே
சேருக மெய்ப்பொருளை சத்சங்கம் வாழ்வாய்
தேறுக ஊறிஊறியே தோல்வி இல்லையே
வாருக அருளை வருங்காலம் உனதே

உனதே உலகம் உனதே உயிரெலாம்
உனதே உடலும் உள்ளமுமே வினையுமே
உனதே செயல் உள்ளிருந்து நடத்துவான்
உனதே யானயுலகு உய்திட உதவு

உதவு யாருக்கும் உன்வினை தீருமே
கதவு திறந்தால் காட்சி கிடைக்கும்
இதமாக இருக்குமே இருள் நீங்குமே
பதமாக பார்த்து பக்தியுடன் இருப்பாயே

இருப்பாயே உந்தன் இருதய கமலத்திலே
நெருப்பாமே நீர்மேல் நின்றிடும் அதிசயம்
உறுப்பாமே தலையில் உன்னத மானதிதுவே
பொறுப்பாயே கிட்டும் பொன்னுடல் ஒளியுடல்

ஒளியுடல் பெற்றார் ஒப்பிலா வள்ளலார்
ஒளியுடல் நாமும்பெற ஒளியூட்டி அருள்கிறார்
களிப்புடன் அவர்காட்டிய கண்மணியில் உணர்ந்தால்
அழிவிலாத தேகமும் அளவிலாத ஆனந்தமுமே

ஆனந்தமே ஆண்டவனை அடைந்தால் உணர்ந்தால்
ஆனந்தமே சொன்னால் அவன்புகழ் பாடினால்
ஆனந்தமே இவ்வுலகு அகரஉகரம் அறிந்தவர்க்கு
ஆனந்தமே கண்டால் ஆறுமுகமான செந்தூர்

## காப்பு

ஐஞ்சிரம் கொண்டவனின் அருந்தவப் புதல்வனே
ஐங்கரம் பெற்றவா ஆனைமுகக் கடவுளே
ஐந்திறம் எந்தனுக்கு அளித்தருள் கற்பகமே
ஐந்திரம் ஒன்றாகியே அமர்ந்தோனே விநாயகனே

## நூல்

அன்பு உதயமாகுமே அகர உகரத்திலே
இன்ப மோங்குமே இணையடி சேர்ந்தாலே
துன்ப மில்லையே தூயஒளி கண்டாலே
என்பு முருகுமே என்கண் ஒளியாலே

ஆதாரம் நீயேஅகங் கனிவார் தமக்கே
பாதார விந்தம்காட்டு விப்பாய் பண்பனே
ஆறாதார நிலைஅங்குச நிலையும் காண்பித்து
ஓராதாரும் ஒளிபெற அருளும் ஓங்காரமே

நினைந்து நெகிழ்ந்து உணர்ந்து நிறையவே
நினைந்து உருகி சிலிர்த்து மகிழவே
நனைந்து வந்தனை புரிந்து வாழ்த்தவே
நனைந்து அருளில் இருக்கவே அருள்வாயே

கேட்கும் சொல் எல்லாம் நின்நாமமே
பார்க்கும் பொருள் எல்லாம் நின்ரூபமே
சேர்க்கும் செயல் எல்லாம் நின்வசமே
யார்க்கும் அருள் எல்லாம் நின்மயமே

வலிந்து வந்தெனை ஆட்கொண்ட வள்ளலே
மெலிந்து மனநொந்து வாடுகிறேன் எனக்குள்ளே
கலித்து கண்காண அழைத்து செல்லே
பலித்து ஞானம்பெற பரம்பொருளே அருள்வாயே

எதையும் செய்திட என்மனம் ஏற்கலையே
உதையும் திட்டும் உன்னால் பெறணுமோ
சிதையும் வாழ்வை சீர்படுத்த மாட்டாயா
கதையும் கவிதையும் கண்ணீரால் எழுதியதே

வாழ்வதில் அர்த்தமேது வரம்நீ தராவிடிலோ
ஆழ்வதில் தியானத்தில் ஆனந்தமே அருளாயோ
வீழ்வதில் வாழ்வே வீணாகுதே காப்பாயே
சூழ்வதில் சகாயமே சூரியனாய் ஒளிரவே

நாடி வருவோர் நலம் அடையவே
பாடி மகிழ்ந்தேன் பாவம் நீக்குவாயே
ஓடி அலுத்தேன் ஓய்வு தருவாயே
தாடி வளர்த்தும் தவசி யாகலையே

சுற்றம் வாழவே சுகம்பல பெற்றிடவே
அற்றம் காணவே அருள்தர வேண்டுமே
சிற்றம் பலவா சிவகாமி அம்மையே
குற்றம் மாளவே குணமுடன் வாழவையே

காண வேணுமே கண்ணினால் உன்னையே
பேண அருளே பேரின்பம் தருவாயே
நாண விடாதே நல்லாக்கி வைப்பாயே
வீண ராகாதே வீரனாக்கி காப்பாயே

கல்வியும் செல்வமும் கவின்மிகு கலைகளும்
நல்விதமா யான்பெற நல்லருள் புரிவாயே
பல்விதமா யையெனை பற்றாமல் காப்பாயே
சொல்வித மன்பாகி சொந்தமாகி வாழணுமே

கிரக நிலையா கிருபை இலையா
பரக திகூடவே பரமேசி யருளே
வரக வியாகவே வரம்நீ தருகவே
விரக தாபனீக்கி விரைந்து காப்பாயே

எல்லாம் வல்லவரே என்னைகைவிட மாட்டாயே
எல்லாம் துன்பமே எல்லோரும் ஏமாற்றுகிறாரே
எல்லாம் இன்பமாய் என்றைக்கு அருள்வாயோ
எல்லாம் உன்செயலே எல்லாம் நன்மைக்கே

அறியாது செய்பிழை அவனியில் ஏராளமே
அறிந்து செய்பிழை அணுவானநீ அறிவாயே
அறிவை தந்தெனை அன்பனாய் ஆக்கிடே
அறிவாலே தெளிவுதந்து அகத்திலே அமர்வாயே

சுயம்ஜோதி தந்தெமை சுகமாக்கி அருளினாயே
சுயம்ஜோதி உணர்ந்து சுகானுபூதி எமக்கருளே
பயம்நீக்கி எங்களை பண்போடு வாழவையே
நயம்நாவில் தந்தெமை நன்மார்க்கம் சேர்ப்பாயே

பலர்போற்ற பக்திநெறி பாவியேனுக்கு அருளினாயே
சிலர்தூற்ற கலங்கினேன் சிவமேஏன் அனுமதித்தாய்
மலர்பாதம் பற்றினேன் மயக்கமெலாம் தீர்ப்பாயே
மலர்வாய் என்னுள்ளே மகிமைதனை காட்டுவாயே

அதைபாடுவேன் இதைபாடுவேன் எனநான்
அகங்காரம் கொண்டதில்லை ஒருபோதும்
எதைபாடினும் எல்லாம் உந்தன் அருள்மயமே
செகமுழுதும் நீயல்லவோ இருக்கின்றாய்
பதைபதைக்கும் என் மனதை பக்குவபடுத்தி
பண்பாய் நீ வந்தமர்ந்து ஆளுகிறாய்
கதைபேசி காலம்செல்லாது கருணை கடலே
கண்வழிபுகுந்து என்கருத்தினில் அமர்வாயே

நான் பேசுவ தெல்லாம் உன்னருள் வல்லபமே
நான் எழுதுவ தெல்லாம் உன்னருள் கீர்த்தியே
நான் பாடுவ தெல்லாம் உன்னருள் மகிமையே
நான் வாழுவ தெல்லாம் உன்னருள் கருணையே

சாத்திரம் கற்றவரே சாதனையில் நிலைப்பாரே
தோத்திரம் பாடியவரே தொல்லையற்று வாழ்வாரே
பாத்திரம் அறிந்தவரே பரமனடி சேர்வாரே
காத்திரம் பார்த்து காத்தாலே புண்ணியரே

பிரம்மத் தியானம் புரியச் செய்தாயே
பிரம்மச் சொரூபம் பார்க்க பணித்தாயே
பிரம்மமே உலகம் உணர வைத்தாயே
பிரம்மஞ் ஞானம் தந்து காத்தாயே

என்னுள்ளிருந்து காத்திடும் ஏகபரம் பொருளே
தன்னிலிருந்து வெளிப்பட்ட தலம் இரண்டே
பின்னியுள்ள மாயவலை பிரித்தே பாருமே
கன்னிவரவே கைகூடும் கடவுனிலை தெரியுமே

கண்ணிலே நின்றாடும் கருணைமிகு தெய்வமே
எண்ணிலே எட்டிரண்டு எழுத்திலே அகரஉகரமே
பண்ணிலே ஒலியாய் பார்வையிலே ஒளியானாயே
நண்ணிலோ நாயகன் நமனில்லை நமக்கே

பாரெலாம் பக்தர்கள் பெருகிட வேண்டுமே
சீரெலாம் சிவனுள் சிந்தையால் சிவக்கவே
ஈரான பதத்தை ஈரமாக்கி செல்லே
மாறான சிந்தை மனத்தில் இல்லாமலே

எண்ணா திருந்தேனே எந்தன் கண்மணியை
ஒண்ணா நயனத்தில் ஒளியாய் கலந்தவனை
கண்ணா மணிவண்ணா கருணை பொழிபவனே
நண்ணா மானிடர் நமசிவய அறிகிலரே

அன்புக்கு அண்ணன் ஆதரவுக்கு தம்பியே
பண்புக்கு அக்கா பாசத்திற்கு தங்கையே
உண்பதற்கு அன்னை உயர்வுக்கு தந்தையே
இன்பத்திற்கு இல்லாள் இறையருள் பிள்ளையே

இன்னலே நிறைந்த இவ்வுலகிலே வாழுமே
மின்னலே போன்றதே மண்ணுலக வாழ்வே
அன்பிலே கிட்டுவதே அமைதியான மனமே
என்பிலே ஒளியேற்றி எந்நாளும் இருக்கலாமே

பண்டிகை கொண்டாடி பண்பாடு காத்திடுவீர்
அண்டிகை யேந்துவார் அவலம் நீக்கிடுவீர்
மண்டிகை தொழுதே மரணமது ஓட்டிடுவீர்
உண்டிகை சுற்றமொடு உவந்தே வாழ்ந்திடுவீர்

சத்தான பக்தர்களை நான்பெற்றே
முத்தான சங்கம் உருவாக்கிடவே
மத்தான மனதாலே கண்நடுவே
மகத்துவம் நான்காண வேண்டுமே
பத்தான பதமதிலே பகவானே
பக்தியாகி நானுனை உணரணுமே
இத்தான நிலைதனை எனக்கருளி
இன்பமாய் வாழ்ந்திட அருள்வாயே

கவிபாடி கண்ணாலே கவினுறு காட்சிகண்டே
புவியோடி புனிதநிலை புகலவே புலமைதாருமே
துதிபாடி துய்ப்பேனே துன்பதிலே துவளாமலே
பதியடி பணிந்தே பகலவனை பார்க்கலாமே

தம்மைமறைத்த தலைவனைக்காண தனக்குள்புக வேண்டுமே
உம்மைமறந்து உலகைதுறந்து உனக்குள்ளே தேடுமே
இம்மைமறுமை துன்பம்நீக்கி இகபரசுகம் தருவானே
அம்மையப்பன் அகிலத்தோர்க்கு அவன்தானே அருள்வானே

இச்சையால் அல்லலுறும் இவ்வுலக மாந்தரெலாம்
அச்சநீங்கி ஆனந்தமாய் அவனியிலே வாழ்ந்திடவே
இலட்சியமுனை அடைவதே லலாடமதில் அமர்ந்தோனே
துச்சமென தொல்லைவிட்டு துணிந்தாலே அருள்வானே

அன்பினால் அடியனை ஆட்கொண்ட ஆதிகுருவே
இன்பினால் இன்னலை இல்லையென இரட்சித்தானே
நம்பினால் நமனில்லை நானிலம் நமதாகுமே
எம்பினால் என்னிலை எந்நாளும் ஏற்றமாமே

| | | | |
|---|---|---|---|
| கண்ணின் | மணியைகண்டு | களிக்கும்நாள் | எந்நாளோ |
| மண்ணின் | மைந்தர்மரண | மிலாவாழ்வு | பெறுவாரோ |
| எண்ணிலா | சித்தர்ஞானியர் | இயம்புநூல் | பாரீரோ |
| பண்ணிய | சாதனைஒரு | நாளும்வீண் | போகாதே |
| எத்தனை | பேரினிலே | எங்கெலாம் | இருக்கிறாயோ |
| அத்தனை | தோற்றமும் | அடியேன் | காணவையே |
| சித்தனை | த்தும்தா | சிந்தையில் | இருந்திடு |
| அத்தனை | கண்டிட | அருள்மழை | பொழிவாயே |
| என்னாவி | துடிக்குதே | என்கடன் | படுத்துதே |
| முன்னாளி | லேசெய்த | மூடமதால் | வாடுகிறேனே |
| பின்னாளி | லேவாழ்வு | பேரின்பமா | யிருக்கவே |
| நன்னாலி | லொன்றை | நல்லாக்கி | வைப்பாயே |
| என்றுவந்து | என்னைநீ | ஆட்கொண்டாயோ | அறிந்திலேன் |
| துன்றுமல | மாயைதனை | நீக்கிஅருள்வாய் | பூரணனே |
| வென்றுஎமை | உமக்கடிமை | செய்வித்தருள் | ஓங்காரமயமே |
| என்றுமெமை | காத்தருள் | உன்பாதம்அகலா | திருக்கயருள் |
| என்னதான் | செய்யவேண்டும் | உன்னருளை | நான்பெற |
| இன்னதான் | செய்யவேண்டும் | எனநீ | அறிவித்திடு |
| பின்னேநான் | என்னசெய்தாலும் | நீதானே | பொறுத்தருள் |
| இன்னமுநான் | துன்புற்றால் | தாங்கமாட்டேன் | தயவுசெய் |
| எத்தனை | மகான்கள் | இந்தபுண்ணிய | பாரதத்திலே |
| அத்தனை | ஊர்களிலும் | அழகுதிருஉரு | கோயில்கள் |
| எத்தனை | நூற்கள் | எங்கள்சொத்து | நாங்கள் |
| அத்தனை | பேரும் | அத்தனைவழிபடும் | அன்பரே |
| தாயின்றி | நாமில்லை | சேயின்றி | தாய்மையில்லை |
| காயின்றி | கனியில்லை | கருணையின்றி | பூகாயாவதில்லை |
| நோயின்றி | உடலில்லை | நுண்ணுயிரின்றி | உடல்நிலைப்பதில்லை |
| ஓய்வின்றி | உழைத்தாலோ | உடலுயிர்விட்டு | பிரிவதில்லை |

என்னை நீ கேள்விகள் கேட்கவைத்து
எனக்குள்நீ பதிலும் தந்தாயே
அன்னை நீ அப்பன் நீ ஆதரிப்பவனும் நீ
எனக்குள் சற்குருவாய் அமர்ந்தாயே
உன்னை நீ எனக்கு உணரவைத்து
எனக்குள் என்னை காணவையே
பின்னை நீ ஒருபோதும் எனைகைவிடேல்
எனக்குள் பேரின்பம் நல்குவாயே

நஞ்சுண்ட கண்டனும் நாராயணனும் ஒன்றெனவே
தஞ்சமென சரணாகதி அடைந்தவர் அறிந்தனரே
பஞ்சபூத ஒடுக்கம் பார்த்து உணர்ந்தால்
பஞ்சமா பாதகமும் பறந்திடும் அருளாலே

சித்தர்கள் எண்ணிலடங்கா தவரிருப்பினும் பதினெண்பேரே
முத்தர்கள் கண்ணிலாணி யாகயிருந்த கருத்துரைத்தாரே
பித்தர்கள் போலுலகில் பிதற்றிதிரியும் பேதைமாந்தரே
பத்தர்கள் பற்பலவிதமாய் போற்றுமந்தபதிதனை அறிவீரோ

அங்கமதில் என்றும்ஓர் நிலையான உறுப்பெது
தங்கமென மேனிதகிக்க செய்யும் தலந்தானது
பங்கமது பாருலகில்எத் தனைவந்தாலும் பாதுகாக்குமது
பொங்குமது பூரிக்குமது பூரணமது எங்குமுள்ளதுவே

கோடி கோடி கவிதைகள் குவலயத்தில் உள்ளதுவே
பாடி பாடி பத்தர்கள் பரிசளித்து சென்றனரே
நாடி நாடி உன் திருவடி சரணடைந்து களித்தனரே
தேடி தேடி திரியுமிந்த மானிடர்க்கு கண்காட்டுவாயே

அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை என்றவா
அஞ்சும் உந்தன் அருள்வழி நடக்கபணித்தவா
அஞ்சும் வாழ்வா ஒருவாழ்வு எனஉரைத்தவா
அஞ்சும் என்கைவர புரிவாயருள் பெருஞ்ஜோதியே

அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்தவா
தங்கும் அருள்தரணி யிலுள்ளோர் பெறயருள்
பொங்கும் ஆனந்தம் எங்களுக்கு கிடைக்கவே
எங்கும் உன்அருளாளர் அல்லலுறல் அழகலவே

நாதந்தான் என்செவியில் உன்அருளால் கேட்கச்செய்
பாதந்தான் என்கண்ணால் எப்போதும் பார்க்கச்செய்
கீதந்தான் என்வாய் உன் மேன்மை இசைக்கச்செய்
போதந்தான் நான்கொள்ள புண்ணியனே அருள்செய்

என்னுடன் பிறந்தவர் அண்ணன்தம்பி அக்கா தங்கை
என்னுடம்பினை தந்தவர் என்தாயும் என்தந்தையும்
என்னுடம்பில் இருப்பவர் யார்என நான் அறிந்தால்
என்னுடம்பில் நான்வந்த காரணத்தை அறிவேனே

என்னுள் நீ இருந்துஏன் என்னை அலைகளிக்கிறாய்
என்னுள் நீ இருந்துஏன் என்னை மகிழ்விக்கிறாய்
என்னுள் நீ இருந்துஏன் என்னை பிறப்பித்தாய்
என்னுள் நீ இருந்துநான் என்னை அறியச்செய்

பாடிட வைத்தாய் பணிவிப்பாய் பாவியேனை
நாடிட ஒளிநெறி நன்மார்க்கம் தந்தாயே
கூடிட சத்சங்கம் கூறிடுவாய் உபதேசம்
ஆடிட வைத்திடாதே ஆடிடும் அம்பலவா

பொருள் வேண்டும் பொன்மலர் அடியவரே
அருள் வேண்டும் அன்புமலர் சாற்றினேனே
இருள் நீங்கிட இறவாது இருந்திட
உருள் சகடாகிய உள்ளத்தில் அமைதிதா

என் செய்வேன் ஏதும் அறிந்திலனே
நன் மார்க்கர் நலம் விரும்பினேனே
துன் புறுமெனை தூக்கி விடலாகாதா
கன் மனமோ கதறு மெனைக்கா

எவ்வுயிரும் நீயன்றோ எவ்வுலகும் நீயானாயே
எப்பெயரும் உன்னதே எவ்வுருவும் நீதானே
எக்குருவும் நீயன்றோ எனக்குள்ளும் நீயல்வோ
எக்காலமும் இருப்பவனே எந்தனுக்கு அருள்கவே

கடனெலாம் தீர்த்திட கருணைசெய் கடவுளே
உடனெல்லா துன்பமும் உருண்டோட செய்வாயே
விடமெல்லா னீங்கியே விழித்திருக்க அருள்வாயே
இடமெல்லா முன்னருளை இயம்பிட வைப்பாயே

அப்பர் குருபூசைகண்டுமகிழ எனக்கருள் தாரும்
ஒப்பார் யாரிவர்க்கு உன்மத்தனாய் உயர்வு தரவாரும்
இப்பார் முழுவதும் ஒன்றேகுலமென உழைத்துவாழ்ந்திட
அப்பார் வைஒன்றே அளித்தருள் பெருஞ்ஜோதியே

பண்ணிய பாவம்போதும் மேலுமெனை தூண்டாதே
புண்ணிய ஆத்மாக்கள் தரிசனந்தனை தந்தருள்
எண்ணிய கருமமெலாம் இனிதெனக்கே முடித்தருள்
நண்ணிய போதெல்லாம் நாதனுனை பற்றிடசெய்

| | | | |
|---|---|---|---|
| எப்பாரில் | யார்எவர் | ஏதுரைக்கினும் | இறைவநீ |
| இப்பாரில் | என்தன்னை | உன்பிள்ளையாய் | ஏற்றுக்கொள் |
| இப்பாரில் | உன்பிள்ளை | நான்எனில் | தப்பாமல் |
| எப்பாரில் | ஏதுரைக்கினும் | உன்னருளால் | நானுரைக்கசெய் |

| | | | |
|---|---|---|---|
| எங்கிருந்தோ | வந்தாள் | என்னுடன் | சங்கமித்தாள் |
| எங்கிருந்தாலும் | அன்பினால் | என்னை | ஆட்டுவிப்பாள் |
| எங்கிருந்தும் | ஆடும் | இயல்பினள் | ஜோதிஅளித்தே |
| எங்கிருந்தாலும் | வாழ்க | என்றெமை | சேர்த்துவைத்தாள் |

| | | | |
|---|---|---|---|
| எப்போதும் | உன்நினைவை | நான்பெற்றே | இருந்திடயருள் |
| தப்பேதும் | நான்செயினும் | நீபொறுத்து | அருள்ஜோதியே |
| முப்போதும் | உன்தன்னையே | போற்றுமிந்த | ஏழைக்கருள |
| இப்போதும் | நல்லதருணமே | இன்னுமேன் | தாமதிக்கிறாய் நீ |

பற்பல ஊரிலும் பணிவுடன் வந்தேனே
பகவான் உன்னையே பலவாக கண்டேனே
பற்பல நூலிலும் பரந்தாமன் பெருமையே
பதமலர் அடைந்திட பக்குவம் சொன்னாரே
பற்பல உருவிலும் பரிபூரணம் நீயன்றோ
பரிமளித்து இருக்கிறாய் பக்தன் அறிவானே
பற்பல அல்லவே பிரம்மம் ஒன்றே
பரிவுடன் உபதேசம் பரமனே அருளினானே

| | | | |
|---|---|---|---|
| திருமுகம் | காட்டாயோ | திருவருள் | கூட்டாயோ |
| இருமுகம் | கண்டேனே | இணையடி | காட்டுவாயே |
| வருமுகம் | நான்தானே | வளமெனக் | கருள்வாயே |
| ஒருமுகம் | உணர்ந்திட | ஒளியுடல் | தந்தருளே |

| | | | |
|---|---|---|---|
| எப்படியோ | நானும் | அறியலுற்றேன் | எட்டிரண்டை |
| அப்படியே | நானும் | இருந்துவிட்டேன் | எட்டிரண்டினுள் |
| இப்படியே | நாளும் | இருக்கயருள் | எட்டிரண்டே |
| மெய்ப்படியே | எல்லாம் | அறிவித்தருள் | எட்டிரண்டே |

| | | | |
|---|---|---|---|
| எல்லாம் | வல்லவரே | எங்கும் | நிறைந்தவரே |
| பல்லாயிரம் | நூல்கள் | பகர்வதும் | உன் அருளையே |
| எல்லையில்லா | ஆனந்தம் | எல்லோரும் | பெறஅருளே |
| நல்லமன | நன்மாந்தர் | நாளெல்லாம் | வாழ்கவே |

என்னையேன் படைத்தாய் எனநான் சிந்திக்கையிலே
தன்னையுணர சற்குருவாய் என்னுள்நீ வந்தமர்ந்தாயே
முன்னைபின்னை வினைகளை வேறறுக்க அருள்வோய்நீ
அன்னையப்பா இன்னமும் அருள தாமதமேனோ

அன்பு உதய மலர் அறிவு உதய மலர்
பண்பு உதய மலர் பக்குவ முதய மலர்
இன்ப முதய மலர் இருதய முதய மலர்
கண்க ளாகிய மலர் கடவுள் நின்ற மலர்

✤ ✤ ✤ ✤ ✤



# குமரியில் குருவும் சீடர்களும்



பாரதிகணேஷ், சிவ செல்வராஜ், இராஜப்பா

சிவசெல்வராஜ் அவர்களின் பொன்விழா வெளியீடு



நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில். ✆ : 233853

